[டாக்டர் மு. கருணாநிதி] [1973 நவம்பர் 24

துணை மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களில் முக்கியமானவற்றை நான் இதுவரை எடுத்துக் கூறினேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புகளில் இவற்றிற்கான விவரங்களைக் காணலாம். துணை மதிப்பீட்டில் சேர்த்துள்ள ஏனைய திட்டங்களைப் பற்றி தனியே விவரித்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை என்று கூறி, 1973-74-ம் ஆண்டின் முதல் துணை மானியக் கோரிக்கைகளை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

7. 1968-69 ஆம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்—அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1968-69-ம் ஆண்டுக்கான மிகைச் செலவு மானிய கோரிக்கையினை அளிப்பார்:

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைத் தலைவர் அவர்களே, 1968-69-ம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். அந்த ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியிருக்கிறது. அத்தகைய செலவினங்கள் பற்றிய விவரங்களை இம்மானியக் கோரிக்கையில் காணலாம்.

1971-72-ம் ஆண்டுக்கான பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழு, 1968-69-ம் ஆண்டிற்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியிருப்பதைக் குறிப்பிட்டுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்கு மானியக் கோரிக்கைகளை மன்றத்தின் முன் வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழு பரிவுரை செய்தது. அவ்வண்ணமே, 1968-69-ம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம்மன்றத்தின்கண் வைக்கப்படுகிறது. மொத்தத்தில், மிகைச்

1973 நவம்பர் 24] *[டாக்டர் மு. கருணாநிதி]*

செலவு 5.52 கோடி ரூபாயாக இருக்கிறது. இதில் பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் செலவினம் சாட்டிய செலவின மாகும். இதுவே 4.53 கோடி ரூபாய் அளவுக்கு பெரிய இனமாக இருக்கிறது. ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணம் என்ன என்பது, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது.

1968-69-ம் ஆண்டிற்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

(8) மின் வாரியத்தின் 1973-74-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—(தொடர்ச்சி)

***திரு. ந. நாச்சியப்பன்** : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1973-74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து நேற்றையதினம் நான் பேசியதன் தொடர்ச்சியாக எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, மின் உற்பத்தி 1966-அம் ஆண்டு இருந்த நிலைமைக்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு உற்பத்தியைப் பெருக்காமல், அதிகமான அளவு கொடுக்கிற திட்டத்தை எடுத்துக் கொண்டார்கள் என்று மாற்றுக் கட்சித் தலைவர்கள் வெளியிலும், சட்டமன்றத்திலும் சுட்டிக்காட்டினார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரத்தைப் பார்க்கிறபோது, 1966-லே மின்சார உற்பத்தி 1.070 மெகாவாட் என்றும் 1973 மார்ச்சில் 1,571 மெகாவாட் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக ஏறத்தாழ 500 மெகாவாட் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். அதேபோல வெளி மாநிலத்தில் இருந்து 1966-லே வாங்கிய மின்சாரம் 406 கோடி யூனிட்டுகள் என்றால் 1972-73-லே 696 கோடி யூனிட் வெளி மாநிலத்தில் இருந்து வாங்கியிருக்கிறார்கள்.

(திரு. ந. கணபதி தலைமை)

அன்றையதினம் மின்சாரத்தைப் பயன்படுத்தியவர்கள் 13.6 லட்சம் என்றால் 1973 மார்ச்சில் 25.45 லட்சம் மக்கள் பயன்படுத்துகிறார்கள். ஒரு தனி நபருக்கு அன்றைக்கு 92 யூனிட் என்றால்